REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: புரட்டாசி 25உ திங்கள் (11—10—54) ★ ★ வெளியூர்: புரட்டாசி 26உ செவ்வாய் (12—10—54) [இதழ் 102

## முடி தாங்கி மக்களாட்சியில்!

தெஹ்ரான், அக். 10—

ஈரான் மாஜி அயல்நாட்டு மந்திரியும் முசா'திக்கின் சகாவுமான உசேன் பதேமிக்கு இராணுவ கோர்ட் இன்று மரண தண்டனை விதித்தது. இதைஎதிர்த்து அவர் அப்பீல் செய்திருக்கிறார்.

★

## பொதுவுடைமையினராட்சியில்!

அரசாங்கத்துக்கு விரோதமாக வேலை செய்தார் என்று கூறி, கம்யூனிஸ்டு ருமேனியாவின் முன்னாள் உதவிப் பிரதமர் லூக்காவுக்கு இன்று (10—10—54) மரண தண்டனை விதிக்கப்பட்டது.

# நெப்போலியன், இட்லர், இருவரும் விடுதலை வீரர்களா?

## 'ஐரோப்பிய ஒற்றுமை' ஆதிபத்திய வெறியானால் 'இந்திய ஒற்றுமை'க்கு என்ன பொருள்?

## 'விடுதலை' விளைவித்த குழப்பம்— வேட்கை வளர்ந்த வரலாறு

## "விடுதலை வாழ்வு"—ஈ. வெ. கி. சம்பத் தெளிவுரை

"விடுதலை என்ற சொல் இன்று பலரின் முழக்கத்திலே ஒலிக்கிறது; இந்த விடுதலை என்ற சொல், குழப்பங்களுக்கும், சண்டைகளுக்கும், போர்களுக்கும், கலகங்களுக்கும் காரணமாக இருந்திருக்கிறது; விடுதலை என்ற சொல்லுக்குப் பொருள் தேடுவதற்காக எத்தனை எத்தனையோ நாசங்கள் விளைந்திருக்கின்றன."

"எப்படி கடவுள் என்ற வார்த்தை பலராலும், பலவகையாக வியாக்கியானம் செய்யப்படுகிறதோ, பலவகையான அர்த்தங்கள் கடவுள் என்ற சொல்லுக்குத் தரப்படுகின்றனவோ அப்படித்தான், விடுதலை என்ற சொல்லுக்கும் பலதரப்பட்ட வியாக்கியானங்கள் தரப்படுகின்றன."

"இப்படி 'விடுதலை'க்குப் பொருள் கொள்வதிலே உள்ள முரண்பாடு இன்னமும் உலகில் நிலவத்தான் செய்கிறது. எங்கு திரும்பினாலும், எப்பக்கம் பார்த்தாலும் இன்னும் பல காலத்திற்கு இந்தக் குழப்பம் இருந்தே தீரும்."

"விடுதலை என்ற சொல்லுக்குப் பதவியிலே இருப்பவர்கள் தருகிற பொருள் வேறு; அப்பதவிகளில் இருப்பவர்களின் கீழே கிடந்து விடுதலையை நிலைநாட்டிக்கொள்ளத் துடிப்பவர்கள் கொள்கிற பொருள் வேறு. இருவரும் ஒருவரை ஒருவர் விடுதலை விரோதிகள் என்று கூறி குற்றம் சாட்டுகிறார்கள்."

"ஆட்சியிலே அமர்ந்திருப்பவர்களை, மக்கள், 'விடுதலை விரோதிகள்,' என்பதும், மக்களில் விடுதலையை நிலைநாட்டிக்கொள்ள போரிடுபவர்களை, ஆட்சியிலமர்ந்திருப்பவர்கள் 'விடுதலை விரோதிகள்' என்பதும் வெகு சகஜமாகிவிட்ட குற்றச்சாட்டுக்கள். இந்தப் பொருள் வேறுபாட்டால் ஏற்படும் (Conflict) முரண்பாடு மேலைநாட்டுச் சரித்திரத்திலே ஏராளமாகக் காணக் கிடக்கிறது."

*—இவ்வாறு, 10—10—54 அன்று காலை 10 மணியளவில், சென்னை 17-வது வட்டம் சூளை சௌந்திர பாண்டியன் நினைவுப் படிப்பகத்தின் சார்பில், பெரம்பூர் லட்சுமி டாக்கீசில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் பேசுகையில் குறிப்பிட்டார்.*

*கூட்டத்திற்கு தோழர் என். வி. நடராசன் தலைமை தாங்கினார்.*

*தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் சிறிது நேரம் பேசியதும், தோழர் கண்ணதாசன் 'சம்பத் தகுந்த வட்டாரங்கள்'எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.*

*அடுத்து, தோழர் ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ. அவர்கள், ஜில்லா போர்டு தேர்தலில் தனது தொகுதியில் தான் அனுபவித்த தொல்லைகளையும், பட்ட கஷ்டங்களையும் விளக்கினார்.*

*காங்கிரசை எதிர்த்து நின்று பெருவாரியான வாக்குகளால் வெற்றி கண்டு, பதவிக்காகக் கட்சி மாறும் 'கனம்' ராமசாமிகளுக்குப் பாடம் கற்பித்ததைப் பாராட்டி பல கழகங்கள் சார்பில் அவருக்கு வெற்றி மாலைகள் சூட்டப்பட்டன.*

*இறுதியாக தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் 'விடுதலை வாழ்வு' எனும் தலைப்பில் அரியதோர் உரை நிகழ்த்தினார்.*

*தலைவர் முடிவுரைக்குப் பின், படிப்பகச் செயலாளர் நன்றி கூறியதும் கூட்டம் இனிது முடிந்தது.*

*கூட்டத்திற்கு நன்கொடையாக அணா நான்கு செலுத்தி ஆயிரக் கணக்கான மக்கள் கூடியிருந்தனர்.*

தோழர் சம்பத் அவர்கள் தொடர்ந்து பேசியதாவது :—

*"இன்றுள்ள சரித்திர ஆசிரியர்கள் எல்லாரும் நெப்போலியனை "போர் வெறியன்," "ஏகாதிபத்தியவாதி" என்று ஒருமுகமாகத் தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள்.*

*நெப்போலியன், இங்கிலாந்தின் மீதும், ரஷ்யாவின் மீதும் மற்றும் போலந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளின் மீதும் போர் துவங்கினான். போர் துவக்கும் நேரத்தில் நெப்போலியன் கூறினான்—*'இந்த நாடுகளில் எல்லாம் இப்போதிருக்கிற ஆட்சிகள் நல்லவை அல்ல; அந்த கொடுங்கோலாட்சிகளை ஒழித்துவிட்டு அந்த நாடுகளுக்கெல்லாம் விடுதலை வழங்குவதற்காகவே போர் தொடுக்கிறேன்;

"ஐரோப்பிய நாடுகள் எல்லாம் இப்படிச் சிதறுண்டு கிடப்பது ஐரோப்பாவிற்கே பெரிய இழுக்காகும்; எனவே, இந்த இழிவைத் துடைக்க ஐரோப்பாவை ஒன்றுபடுத்துவது (Unification of Europe) என்ற ஒரு 'புனித லட்சிய'த்தைக் கொண்டிருக்கிறேன்; அதற்காக, அப்புனித லட்சியத்தை ஈடேற்றத்தான் போர் தொடுத்துள்ளேனே தவிர, ஆதிபத்திய வெறியின் காரணத்தால் அல்ல; என்னுடைய லட்சியம் ஈடேறினால், ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து, ரஷ்யா, போலந்து போன்ற நாடுகளில் வதியும் மக்களுக்கு ஒரு நிரந்தரமான விடுதலையும், பாதுகாப்பும் கிடைக்கும் என்று நம்புகிறேன்; அந்த மக்களுக்கு அத்தகையதோர் விடுதலையையும், பாதுகாப்பையும் தர நான் என் வாள் பலத்தை நம்பியிருக்கிறேன்" என்றான்.

"போர்களிலே தோல்வி கண்ட நேரத்திலும்கூட தனது 'புனித லட்சியம்' ஈடேறாமல் போகிறதே என்று வருந்தினான்; ஆனால், இன்று உலகம் அவன் கூறிய லட்சியத்தைப் புனிதமானது என்று ஏற்றுக்கொண்டிருக்கிறதா? விடுதலை லட்சியம் என்று ஒப்புக்கொள்கிறதா? இல்லையே! மாறாக, உலகெங்கணுமுள்ள சரித்திரப் புத்தகங்கள், ஜப்பானிய சர்வ கலாசாலையில் மாணவர்கள் பயிலும் சரித்திரமானாலும், சென்னை சர்வகலாசாலையில் பயிற்றுவிக்கப்படும் சரித்திரமானாலும், மாஸ்கோ பல்கலைக் கழக சரித்திரமானாலும், எல்லா சரித்திரங்களும் நெப்போலியனை ஒருமுகமாக, 'ஏகாதிபத்திய வெறியன்' என்றுதான் தீர்ப்பு வழங்கியிருக்கின்றன.

ஐரோப்பாவில் தனித்தனியாக வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் கூட்டத்தின் சுதந்திரத்தைப் பறிக்க முயன்ற விடுதலை விரோதி

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

# ரயில்வே என்ஜின் முன் பக்தர்கள் மறியல்!

## ஒன்றரை மணி நேரம் கழித்து அதிகாரிகள் பணிவு!

காசி, அக். 9—

**டில்லி ஹௌரா எக்ஸ்பிரசின் என்ஜின் முன் உட்கார்ந்து கொண்டு மறியல் செய்து, ஒன்றரை மணி நேரம் வண்டி செல்ல இயலாமல் தடுத்த பிரயாணிகளின் கோரிக்கைக்கு இரயில்வே அதிகாரிகள் இணங்கிய செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது.**

*டில்லி — ஹௌரா எக்ஸ்பிரஸ் வண்டியின்முன் பிரயாணிகள் பெருங் கூட்டமாக தண்டவாளத்தில் உட்கார்ந்துகொண்டதால் வண்டி புறப்பட $1\frac{1}{2}$ மணி நேரம் தாமதம் ஆயிற்று.*

*டில்லியில் பூஜா விழாவில் கலந்துகொண்டு கல்கத்தா திரும்பிய பிரயாணிகள் தனி பெட்டி ஒன்றில் டில்லி—ஹௌரா எக்ஸ்பிரசில் திரும்பி வந்துகொண்டிருந்தார்களாம்.*

*மொகல்சாரா என்ற ரயில் நிலையத்தில் மேற்படி பிரயாணிகள் வந்த பெட்டி கழற்றப்பட்டு வேறு சாதாரண வண்டித் தொடரில் சேர்ப்பதற்காக நிறுத்தப்பட்டதாம்.*

*தனி பெட்டியில் இருந்த பிரயாணிகள் தங்கள் பெட்டியை எக்ஸ்பிரஸ் வண்டியில்தான் சேர்க்க வேண்டுமென்றும், சாதாரண வண்டியில் சேர்க்கக்கூடாது என்றும் ஆட்சேபித்தார்களாம்.*

*ரயில்வே அதிகாரிகள் மறுக்கவே பூஜா விழாவிற்குச் சென்று திரும்பி வந்து கொண்டிருந்த அந்தப் பிரயாணிகள் என்ஜின் முன்னர் தண்டவாளத்தில் உட்கார்ந்துகொண்டு சத்தியாக்கிரகம் செய்தார்களாம்.*

*ஒன்றரை மணி நேரம் சத்தியாக்கிரகிகள் எழுந்து வழிவிட மறுக்கவே, ரயில்வே அதிகாரிகள், பிரயாணிகளின் கோரிக்கைக்கு இணங்கினார்கள் என்று தெரிகிறது.*

# தோழர் இரா. நெடுஞ்செழியன் இலங்கைப் பயணம்

**திராவிட முன்னேற்றக் கழகத் துணைச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இலங்கையில் சுற்றுப் பயணம் செய்யும் பொருட்டு, 14—10—54 வியாழனன்று காலை 11-45 மணிக்குப் புறப்படும் 'ஏர் சிலோன்' விமானத்தின் மூலம், சென்னை மீனம்பாக்கம் விமானக்கூடத்திலிருந்து புறப்படுகிறார். இடையில் யாழ்ப்பாண விமான நிலையத்தில் கழகத் தோழர்களைச் சந்தித்துப் பேசிவிட்டு, நேரே கொழும்பு சென்று சேர்வார்.**

15, 16, 17 ஆகிய நாட்களில் கொழும்பு தமிழ்ச் சங்க ஆண்டு விழாக் கூட்டங்களில் கலந்து கொள்வார். 15—10—54ம் நாள் "முத்தமிழ்" என்னும் பொருள் பற்றிப் பேசுவார். அப்பேச்சு இலங்கை வானொலி நிலையத்தின் மூலம் மாலை 7-45 மணி முதல் 9-00 வரை ஒலி பரப்பப்படும்.

16—10—54-ம் நாள் 'வள்ளுவர் வகுத்த வாழும் நெறி' என்பதுபற்றியும், 17—10—54-ம் நாள் "புரட்சிக் கவிஞர்" என்பது பற்றியும் பேசுவார். அந்த இரு பேச்சுகளின் சிற்சில பகுதிகள் 18—10—54-ம் நாள் இரவு 9-30-மணியிலிருந்து 10-15 மணி வரையில் ஒலி பரப்பப்படும்.

17—10—54ம் நாள் காலையில் பட்டி மண்டபமும் கவியரங்கமும் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

பின்னர் நான்கு நாட்கள் யாழ்ப்பாணப் பகுதிகளிலும், கண்டி பல்கலைக் கழகத்திலும் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் கலந்து

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 11—10—54 திங்கள்


# வளர்ந்து வரும் ஊழல்!

[3]

இந்திய சர்க்கார், இங்கிலாந்தில் ஜீப் கார் கொள்முதல் செய்யும் வகையில், முன்பணமாக லட்சக்கணக்கில் ரூபாயைக் கொடுத்துவிட்டு, முன் யோசனையில்லாமல் கொடுத்த பணத்தை வழக்குத் தொடுத்துப் பெற ஆலோசித்துக் கொண்டிருக்கிறதென்பதையும், இவ்வாறு கடந்த ஐந்து ஆண்டுகளாகச் செய்துவரும் ஆலோசனையில் இன்னமும் ஒரு முடிவுக்கு வர இந்திய சர்க்காரால் முடியாமல் இருக்கிறது என்பதையும் ஏற்கெனவே நாம் விளக்கிக் கூறியிருக்கிறோம்.

முதலில் குறிப்பிட்ட ஒரு கம்பெனியிடம் செய்து கொண்ட ஒப்பந்தப்படி, அந்தக் கம்பெனியிடமிருந்து ஜீப் கார்களைப் பெறுவது உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் முடியாது போனதையும், முன் யோசனை இல்லாமல் முதல் ஒப்பந்தம் செய்துகொண்டதினால் நஷ்டம் ஏற்பட்டதைத் தெரிந்து கொண்ட பின்னருங்கூட, இரண்டாவது கம்பெனியிடம் ஒப்பந்தம் செய்துகொண்டதிலும் முதலில் செய்த தவறையே மீண்டும் ஒரு முறை செய்யத் துணிந்த பொறுப்பற்ற இந்திய சர்க்கார் அதிகாரிகளின் பொறுப்பற்றப் போக்கையும் குறித்து, மக்கள் சபை பொதுக் கணக்குத் தணிக்கைக் குழு சுட்டிக் காட்டியுள்ளதையும் ஏற்கனவே விளக்கிக் கூறியுள்ளோம்.

இங்கிலாந்தில் உள்ள இந்திய சர்க்கார் தூதுவராலயத்தில் குறிப்பிட்ட பணி புரிவதற்கென்றே நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள், ஜீப் கார் கொள்முதல் செய்வதற்கு முன்னதாக சிந்தித்துப் பார்க்க வேண்டியவற்றில், எத்தனை வகையில் வேண்டுமென்றே தவறு செய்திருக்கிறார்கள் என்பதை, பொதுக் கணக்குத் தணிக்கைக் குழு விளக்கமாக எடுத்துக் காட்டியிருக்கிறது.

ஏதாவது ஒரு பொருளைக் கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தம் செய்துகொள்வதில் வழக்கத்தில் உள்ள நடைமுறையை, அதாவது, சர்க்கார் பொறுப்பாளர் சட்ட நிபுணர்களின் அறிவுரையைக் கேட்டு, ஒப்பந்தம் செய்துகொள்ள உரிமையுடைய அதிகாரிகள் நடந்துகொள்ளத் தவறிவிட்டிருக்கிறார்கள். 'டெண்டர்' விடத் தவறிவிட்டார்கள். ஜீப் கார்களை விற்பதில், பெயர் பெறுதலும், புதிதாகத் துவங்கப்பட்ட ஒரு லிமிடெட் கம்பெனியிடம், அதன் மூலதனம் பற்றும் முன்னும் பின்னும் அறிந்துகொள்ளாமல் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அக்கம்பெனியைக் குறித்து [illegible] த்திரமும், ஆலோசனையும் பெறாமல் முன்பணம் கொடுக்கப்பட்டுள்ளது. பொருத்தமற்ற முறையின் ஒப்பந்த விதிகளை மாற்றியும், பொருள்களுக்கு அத்தாட்சிப்பத்திரம் பெறாமல் முன்பணம் கொடுக்கப் பெற்றது. 502 ஜீப் கார்களை சோதித்துப் பார்த்ததற்கான அத்தாட்சி இல்லாமல இரண்டாம் முறையாக 81,575 பவுன்கள் முன்பணமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. முதல் கம்பெனியிடம் கொடுக்கப்பட்ட பணத்தை, ஒப்பந்தத்தில் வசதி இருந்துங்கூட, வசூலிக்க முயற்சிக்கவில்லை.

இங்கிலாந்தில் உள்ள இந்திய சர்க்காரின் கொள்முதல் அதிகாரிகள் நடந்துகொண்டுள்ள போக்கில் உள்ள தவறுகளை, மக்கள் சபை பொதுக் கணக்குத் தணிக்கைக் குழு, மேற்கண்டவாறு எடுத்துக் காட்டியுள்ளது. அதை, ஒருவர் மேலெழுந்தவாரியாக படித்தாலும், சர்க்கார் அதிகாரிகள் ஜீப் கார் கொள்முதல் விஷயத்தில் வேண்டுமென்றே தவறு செய்திருக்கிறார்கள் என்ற முடிவிற்குத்தான் வருவார் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு வேண்டுமென்றே கடமையிலிருந்து தவறுவதென்பது பிரதிபலன் கருதாமல் நடந்திருக்கிறது என்றும் ஒருவராலும் சொல்ல முடியாது என்பதும் நிச்சயத்திலும் நிச்சயமாகும்.

'கம்பெனியின் மூலதன பலத்தைக் குறித்து எங்களுக்கு ஒன்றும் விளக்கமாகத் தெரியாதாயினும், செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்ற நம்பிக்கையான கம்பெனிதான்' என்று பாங்கி குறிப்பு கூறுகிறது. இதை ஏற்றுக்கொள்ளக்கூடிய பாங்கிக் குறிப்பாக, அத்துறையில் தனி அனுபவமுடையவர்களும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்; அதிலும் கோடிக்கணக்கான ரூபாய் விஷயத்தில் ஒருக்காலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று தணிக்கைக் குழு சாடி இருக்கிறது.

முதல் கம்பெனியிடம் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்போதுதான் வழக்கத்தில் உள்ள சாதாரண நடைமுறைகளை அனுசரித்து நடக்காது இந்திய சர்க்கார் அதிகாரிகள் தவறு செய்து இருக்கிறார்கள் என்றால், முதல் கம்பெனியிடம் முன் பணமாகக் கொடுத்ததை, இரண்டாவது கம்பெனியிடம் சரி செய்ய ஒப்பந்தம் செய்துகொண்ட பொழுதாவது, முதல் ஒப்பந்தத்தின்போது செய்த தவறையே தாங்கள் மீண்டும் செய்யாமல் எச்சரிக்கையாக நடந்துகொண்டு இருக்க வேண்டும். ஆனால் அதிகாரிகளோ, செய்த தவறையே மறுபடியும் செய்திருக்கிறார்கள்.

ஒப்பந்தம் செய்துகொண்டபடி இரண்டாவது கம்பெனியும் புதிதாக உருவெடுத்த ஒன்றுதான். அதன கம்பெனியின் நாணயத்தைக் குறித்து, பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்டு அறிந்துகொள்ள முயன்றிருக்க வேண்டும்; அல்லது மற்றத் தொழில் துறை அதிகாரிகளை அணுகி ஆலோசித்திருக்க வேண்டும். அந்தக் கம்பெனியின் நிர்வாகஸ்தர்களின் யோக்கியதாம்சங்களையும் விசாரித்து அறிந்திருக்க வேண்டும். இவைகளில் ஒன்றையும் அறிந்துகொள்ள முயற்சிக்காமல், புதிய கம்பெனியிடம் இரண்டாவதாக ஒப்பந்தம் செய்துகொண்ட அதிகாரிகள் மூளை இருக்கக் கூடாது என்று குற்றஞ் சாட்டியுள்ளது.

அதிகாரிகள் நடந்துகொண்ட ஒழுங்கீனம் ஒருபக்கம் இருக்க, அந்த ஒப்பந்தத்திற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகளைக் கண்டுபிடித்து, அவர்கள் மீது, தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென, இதே தணிக்கைக் குழு ஏற்கனவே கோரி இருந்துங்கூட, இந்திய சர்க்கார், இதுவரை அந்தத் தவறு செய்த அதிகாரிகள் மீது, எந்த நடவடிக்கையும் எடுக்காமல் காலம் செய்துகொண்டு வந்திருக்கிறதை நினைத்தால், எவருக்குத்தான் பண்டிதரின் சர்க்கார் மீது சீற்றம் பிறக்காது? தவறு செய்யும் அதிகாரிகளுக்கு உடந்தையாக இருப்பதுதான் லட்சணமோ என்று பண்டிதர் சர்க்கார் மீது குறை கண்டால், அதைத் தவறு என்று கூற என்ன நியாயமிருக்கிறது?

ஜீப் கார் கொள்முதல் ஊழல் இவ்வாறு இருக்க, சிப்பாய்களின் மாரிக்காலத் தேவைக்காகக் கம்பளங்களுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டது. ஆனால் மாரிக்காலத்துக்குக் கேட்ட கம்பளம், கோடைக்காலத்தில் இந்தியா வந்து சேர்ந்தது! வந்து சேர்ந்த கம்பளமும் மட்டமானதாக இருந்தது! அதை இராணுவத்திற்கு உபயோகப்படுத்துவதற்குப் பதிலாக, அதில் போட்ட பணத்தை, அக்கம்பளத்தை பொதுமக்களிடம் ஏலம் போட்டு ஈடு செய்து கொள்ள வேண்டிய கட்டாயம், இந்திய சர்க்காருக்கு ஏற்பட்டது!

பண்டிதர் தலைமையில் நடைபெறும் இந்திய சர்க்கார் நிர்வாகத்தில் இவ்வளவு ஊழல் மலிந்து கிடந்தபோதிலும், அவருடைய புகழ் விண்ணில் பறந்துகொண்டுதான் இருக்கிறது! அதனால் அவருக்கு உண்டாகும் உள்ள மகிழ்ச்சி, தமது நிர்வாகத்தில் நடைபெறும் ஊழல்களை, அறிந்துகொள்ளவிடாமல் அவரைத் தடுத்துக்கொண்டு இருக்கிறது போலும்!

விண் முட்டும் புகழையும் ஊழல் மலிந்த நிர்வாகம் உடைத்தெறிந்துவிடும் என்பதை பண்டிதர் என்றுதான் உணரப் போகிறாரோ? பதவியில் தமக்கு சலிப்பு ஏற்பட்டிருப்பதாக சில நாட்களுக்கு முன் பண்டிதர் வெளியிட்ட கூற்றுக்கு, இந்த ஊழல் துர்நாற்றமும் ஒரு காரணமாக இருந்தாலும் இருக்கலாம்!

# டால்மியாபுரம் பெயரை மாற்ற இரயில்வே அமைச்சரிடம் மகஜர்!

## சென்னை விரும்பினால் தடையில்லை என்று அமைச்சர் உறுதி!

### பாராளுமன்ற உறுப்பினர் கடமைபற்றி டாக்டர் கிருஷ்ணசாமி

''டால்மியாபுரம் என்ற ரயில் நிலையத்தின் பெயரை மாற்றுவதற்காக, இந்திய சர்க்கார் ரயில்வே அமைச்சரிடம் மகஜர் ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது; மாநில சர்க்கார், பெயரை மாற்றுவதற்கு விரும்பினால், ரயில்வே அதிகாரிகளுக்கு எவ்வித ஆட்சேபணையுமில்லையென ரயில்வே அமைச்சர் என்னிடம் உறுதி அளித்துள்ளார்,''

—என்று, இந்தியப் பாராளுமன்ற உறுப்பினரான டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, 9—10—54-ல், சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில், 'பாராளுமன்றமும் மக்களும் நாமும்' என்ற தலைப்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை தேனாம்பேட்டை இளைஞர் கழகம், திராவிடர் கலை உரிமைக் கழகம் இவைகளின் ஆதரவில் நடைபெற்ற கூட்டத்திற்கு தோழர் பி. பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி பேசுகையில் கூறியதாவது:—

''பாராளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பு, அவர்கள் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் முடிவு பெறுவது இல்லை. அவர்கள், பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு வரும் செய்திகளில் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும்.

பாராளுமன்றத்தில் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் மூன்றாவது அரசியல் சட்டத் திருத்த மசோதா பற்றி அவர் பேசுகையில், 'அந்த மசோதா மாநிலங்களின் அதிகாரத்தைப் பறிக்க முயற்சிக்கிறது என்றும், மாநிலங்களின் சுதந்திரத்தைக் குலைக்க முயற்சிப்பதாகுமென்றும், நாட்டில் உள்ள இளைஞர்கள் எல்லோரும், இந்த மசோதா, எவ்வாறு குடியரசின் உறுப்பினர்களான மாநிலங்களின் அதிகாரங்கள், உரிமைகள் ஆகியவற்றைக் குறைக்க முயற்சிக்கிறது என்பதை சிந்தித்து உணரவேண்டு'மென்றும் கேட்டுக்கொண்டார்.

இந்திய சர்க்காரின் தொழில் கொள்கையைக் கண்டித்து அவர் பேசுகையில், 'தேசீய தொழில்களின் அபிவிருத்தி என்ற பெயரில் சர்க்கார் கடைப்பிடிக்கும் கொள்கை, மாநிலங்களிடமுள்ள அதிகாரங்களை அபகரிப்பதிலே தான் முடியு'மென்றார்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த தோழர் பி. பாலசுப்பிரமணியம் பேசுகையில், 'இப்போது மக்கள் முன்னுள்ள குறிக்கோள் திராவிட நாட்டை அடைவது என்றும், திராவிட நாட்டை அடைந்தால் நமது எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்துவிடுமென்றும், மக்கள் அனைவரும் தங்கள் வலிமையும், எண்ணங்களையும் திரட்டி திராவிட சோஷலிசக் குடியரசை நிறுவுவதில் முனையவேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டார்.

## எகிப்தில் இஸ்ரேலிய ஒற்றர்கள்!

### நாசவேலையில் ஈடுபடுகிறார்களாம்!

எகிப்தில் வேவு பார்த்துவரும் இஸ்ரேலிய ஒற்றர் கூட்டம் ஒன்றை எகிப்திய போலீசார் [illegible] சர்க்கார் [illegible] கூறுகிறது.

வேவு பார்ப்பதுடன் இந்த ஒற்றர்கள் நாசவேலையிலும் ஈடுபட்டிருந்தனர் என அறிவிக்கிறது.

குண்டுகள் [illegible] பிடிபட்டோர் [illegible] முழுவதிலும் அதிருப்தியற்ற தன்மையை உண்டுபண்ணுவதாக இந்த ஒற்றர் கூட்டம் தனது அனுதாபிகளுக்கும், அதனைச் சார்ந்த துப்பாக்கிகளுக்கும் உத்தரவிட்டு, அதன் மூலம் எகிப்து, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளிடையே உறவு குலையுமாறு செய்ய முயற்சித்தார்களாம்!

சூயஸ் ஒப்பந்தத்தை மீறிய நடவடிக்கையில் இவ்வாறு நாசவேலையில் இந்த இஸ்ரேலிய ஒற்றர்கள் முயற்சித்தனராம்!

இந்தக் கொடியவர்கள், கெய்ரோவில் உள்ள அமெரிக்கத் தூதராலயத்திலும், அலெக்சாண்டிரியாவிலுள்ள அமெரிக்க செய்தி விநியோக அலுவலகத்திலும் ஜூலை 14-ம் தேதியன்று வெடி குண்டுகளைப் புதைத்து வைத்திருந்தார்களாம். அதோடு, ஜூலை 23-ம் தேதியன்று கெய்ரோ, அலெக்சாண்டிரியாவில் உள்ள சினிமாக் கொட்டகைகளில் வெடி குண்டுகளை வைத்திருந்தார்களாம்.

## மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு

### சினிமா உதவலாம்!

### சென்னை கல்வி இலாகா அதிகாரியின் கருத்து

குடந்தையில், சர்க்கார் கல்லூரியின் நூற்றாண்டு விழாவில், விஞ்ஞானக் கண்காட்சி ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில், சென்னை மாநில கல்வி இலாகா டைரக்டர் என். கோவிந்தராஜுலு குறிப்பிட்டதாவது:-

''மாணவர்களின் மனதைப் பல வழிகளிலும் இழுத்துச் செல்வதற்கு இயக்கி வருகின்ற சக்திகளை மறைப்பில் சினிமாவும் ஒன்று; ஆனாலும், சினிமாவிலோ அல்லது சினிமா பார்ப்பதிலோ ஆபத்து எதுவும் இல்லை; மாணவர்களுக்குத் தேவையான படங்களைத் தேர்ந்தெடுப்பதில்தான் அதன் தன்மை பொறுத்திருக்கிறது; நல்ல படங்கள் மாணவர்களின் அறிவை வளர்ப்பதற்கு ஒரு சிறந்த சாதனமாக அமைகின்றன.''

## நோபல் சமாதானப் பரிசு

### இவ்வருடம் எவருக்கும் இல்லை

நோபல் சமாதானப் பரிசை இவ்வாண்டு, யாருக்குமே அளிப்பதில்லை என நார்வே மக்கள் சபை முடிவு செய்துள்ளது.

[illegible] அடுத்த ஆண்டு [illegible] வைக்கப்படும்.

[illegible] பரிசுக் குழு பரிசளிக்கக்கூடிய தகுதியான [illegible] பற்றியோ எவ்வித தகவலும் வெளியிடவில்லை.

## அமெரிக்க பிரச்சார பிரசுரங்கள்!

### இராணுவத்தினருக்கு தரக்கூடாதென உத்தரவு!

சென்னை, அக். 4—

அமெரிக்க தூதுவராலயமோ, மற்ற அமெரிக்க பிரச்சார நிறுவனங்களோ அமெரிக்க புத்தகங்களையோ அல்லது பிரசுரங்களையோ இந்திய ராணுவத்தினருக்கு இலவசமாகத் தரக்கூடாதென இந்திய அரசாங்கம் இப்போது அண்மையில் உத்தரவு பிறப்பித்திருப்பதாக இங்கு அறிவிக்கப்படுகிறது.

அமெரிக்க பிரச்சார செய்தி நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, 'அமெரிக்கன் ரிபோர்ட்டர்' மற்றும் இதர அன்பளிப்பு பிரசுரங்கள் முதலியன பொது வாசகசாலைகள், படிப்பகங்கள், வியாபார அலுவலகங்கள் மற்றும் எல்லா இராணுவ அதிகாரிகள், அருப்புகள் ஆகியவர்களுக்கும் மற்றும் இதரர்களுக்கும் இலவசமாகத் தந்து வருகின்றனர்.

இராணுவத்தினரிடையே மனக்குழப்பத்தை உண்டுபண்ணாதிருக்கவே இந்த பிரச்சார பிரசுரங்கள் இலவசமாகத் தரப்படுவதை இந்திய அரசாங்கம் தடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

# எரிமலை வெடிப்பது நிச்சயம்!

(:)

## ஆப்பிரிக்கர்களின் விடுதலை கிளர்ச்சி: காலின்ஸ் கருத்து

### 'இரத்த ஆற்றில் மூழ்காதீர்கள்' என்று வெள்ளையருக்கு எச்சரிக்கிறார்!

"அடுத்த ஆறு மாதங்களுக்குள் தென் ஆப்பிரிக்காவில் பெரும் கிளர்ச்சி ஒன்று குமுறி எழ இருக்கிறது,"

என்று பாதிரியார் கானன் காலின்ஸ் கூறினார்.

"அடுத்த ஆறு மாதத்திற்குள் இல்லை என்றாலும், அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் நிச்சயம் விடுதலைக் கிளர்ச்சி குமுறி எழும்" என்று அவர் மேலும் கூறினார்.

"தென் ஆப்பிரிக்கா, போலீஸ் இராஜ்யமாக மாறிவருகிறது; இப்போது அது முக்கால் பங்கு வெறும் போலீஸ் இராஜ்யமாகவே இருக்கிறது"

என்று செயின்ட் பால் ஆலயத்தின் பாதிரியான காலின்ஸ் மேலும் கூறினார்.

'ஆப்பிரிக்கர்கள், இந்தியர்கள் மீது அடக்குமுறை பிரயோகம் செய்வதென்றால் போலீசார் மிகவும் மகிழ்ந்து காணப்படுகிறார்கள்' நான் குறிப்பிடும் விடுதலைக் கிளர்ச்சி என்னும் எரிமலை வெடிக்குமானால் அங்கே பலர் இரத்தத்தில் மூழ்கி எழவும், கொடுமை, பயங்கர ஆட்சி இவைகளிடையே சிக்கலான சூழ்நிலை நேரிடும்; ஆனால், அந்த நிலைக்கு வெள்ளையர்களே பொறுப்பாளியாவார்கள்' என்று அவர் மேலும் கூறினார்.

வெஸ்ட்மினிஸ்டரில் உள்ள மண்டபம் ஒன்றில் கானன் காலின்ஸ் பேசும்போது இவ்வாறு குறிப்பிட்டார். இவர் இரண்டு மாத காலம் தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து திரும்பியிருக்கிறார்.

"இன வெறி தென் ஆப்பிரிக்காவின் பேயாக மாறியிருக்கிறது; அவர்கள் வாழ்வை ஆரம்பம் முதல் கடைசி வரை நாசமாக்குகிறது; எங்கு பார்த்தாலும், இன வெறி, வெறுப்பு, துவேஷம், சந்தேகம் இவைகளே சூழ்ந்து காணப்படுகின்றன,"

"ஆஸ்பத்திரிகள், வீடுகள், பள்ளிகள் இவைகளில் பணம் செலவழிக்கப்பட்டாலும், ஆப்பிரிக்கர்களில் பெரும்பான்மையினர் மிகவும் கீழ்த்தரமான நிலையில் வாழ்கின்றனர்.

பிரிட்டனில், வீடுகளில் வசிக்கும் மிருகங்களுக்குக் கிடைக்கும் வசதிகளை விட மிகவும் மோசமான வசதிகளே ஆப்பிரிக்கர்களின் பெரும்பான்மையினருக்குக் கிடைக்கிறது," என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## மாவட்டக் கழகத் தேர்தல் விபரங்கள்

சென்னை மாநிலத்தில் நடைபெற்றுவரும் மாவட்டக் கழகத் தேர்தல்களில், மொத்தமுள்ள 204 இடங்களில் இதுவரையில் காங்கிரஸ் கட்சி 165 இடங்களைக் கைப்பற்றியுள்ளதாகத் தெரிய வருகிறது.

சேலம் மாவட்டத்திலுள்ள மொத்த வாக்காளர் 16,15,280 பேர்களில் 5,16,707 பேர் தான் வாக்குரிமை அளித்திருக்கின்றனர். இந்தப் புள்ளி விபரத்திலிருந்து, அந்த மாவட்டத்தில் சுமார் 82 சத விகிதத்தினரே தங்கள் வாக்குரிமையை அளித்துள்ளனர் என்று தெரிகிறது. மேலும் செல்லுபடியாகாத வாக்குரிமைச் சீட்டுகளின் எண்ணிக்கை மட்டும் 87,000!

இதே மாவட்டத்திலுள்ள ஒரு தாலுகாவில் மட்டும் 7,007 செல்லாத ஓட்டுக்கள் இருந்தனவாம்! இவ்வளவு செல்லாத ஓட்டுக்களையும் வைத்துக் கொண்டுதான் காங்கிரஸ் 'வெற்றி பெற்றுவிட்டது' என்று தம்பட்டமடித்துக் கொள்கிறார்கள்!

## மாஸ்கோவில் பிரசாரம் செய்ய...

### பாகிஸ்தான் அனுமதி கோருகிறது!

ரஷ்யா மறுத்தால், சோவியத் பிரசுரங்களை தடை செய்யுமாம்!

ரஷ்யாவில் உள்ள தனது அதிகாரிகள், செய்தி அறிக்கைகளும், பிரசார வெளியீடுகளும் அச்சடித்து வினியோகிப்பதற்கு தன்னை ரஷ்ய அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் கோரியுள்ளதாக அறிக்கை ஒன்று கூறுகிறது.

அவ்வாறு அன்பளிப்பு பிரசுரங்களை பாகிஸ்தான் வெளியிட ரஷியாவில் அனுமதிக்கப்படாவிட்டால், பாகிஸ்தான் நாட்டிற்குள், ரஷ்யா அன்பளிப்பு பிரசுரங்கள் வெளியிடுவதை பாக். அரசாங்கம் தடை செய்து விடக்கூடும் எனத் தெரிகிறது.

பாகிஸ்தான் தூதர் மாஸ்கோவில் தனது விருப்பப்படி போக வர முடியாது என்று ரஷ்யா தடை விதித்திருப்பதை யொட்டி, பாகிஸ்தானும், கராச்சியில் உள்ள சோவியத் ரஷ்யத் தூதரின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தியுள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது.

## விடுதலைத் தீயை அணைக்க வரலாற்றை அகற்ற வேண்டுமாம்!

### 'டாக்டர்' ஒருவரின் பேதமை!

பஞ்சிம், அக் 7—

போர்த்துகீசிய அரசாங்கத்துக்கு, கோவா கவர்னர்-ஜெனரல் மூலம் டாக்டர் சாக்ரமென் டிகாஸ்டா என்பவர் தந்துள்ள வெளியிடாத அறிக்கை ஒன்றில் சில பல யோசனைகளை வழங்கியுள்ளாராம்.

அதில், கோவாவில் பொங்கியெழுந்துள்ள விடுதலை ஆர்வத்தை அடக்க 'அரியதோர்' யோசனையும் இடம் பெற்றிருக்கிறதாம்.

"மாணவர்களிடையே நாட்டுப்பற்றையும், அரசியல் மனப்பான்மையும் உண்டுபண்ணுவதாக இந்திய தேச சரித்திரம் இருக்கிறது; அதனால், தங்கள் 'சொந்த' நாட்டின் மீது அவர்களுக்கிருக்க வேண்டிய கடமை உணர்வும், நன்றியும் அற்றுப் போய்விடுகின்றன; எனவே, கோவாவிலிருக்கும் ஆங்கில பாடசாலைகளின் பாடத் திட்டத்திலிருந்து இந்திய சரித்திரம், பூகோளம் ஆகிய பிரிவுகளை நீக்கிவிட வேண்டும்" என்பதே டாக்டர் டிகாஸ்டாவின் அறிக்கையில் கண்டுள்ள 'அரிய' யோசனையாம்!

## மலைப் பிரதேச மாநில கோரிக்கை!

### அசாம் துண்டாடப்படும்?

அசாம் மாநிலத்தில் உள்ள மலைப்பாங்கான பிரதேசங்களில் வாழும் மலைஜாதியினர், தங்களுக்கென 'கிழக்கிந்திய மலைப் பிரதேச மாநிலம்' என்ற பெயரில் தனியொரு மாநிலம் வேண்டுமென முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

நடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற எல்லா அசாம் மலைஜாதி மக்கள் தலைவர்கள் மாநாடு ஒன்றில், தீர்மானம் மூலமாக ஏகமனதாக இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

அசாமில் உள்ள ஆறு சுதந்திரமான மாவட்டங்களிலுள்ள மலைஜாதியினரின் பல சங்கங்கள் ஏற்கனவே இப்படி ஒரு 'மலைப் பிரதேச' மாநிலம் தேவை எனக் கோரியுள்ளன.

## மந்திரி பக்தவத்சலத்தின் அறிவுக் குழப்பம்!

]o[

மாவட்ட கழக தேர்தலில் காங்கிரஸ் தலையீட்டுக்கு முரண்பட்ட சமாதானம்

தலைச்சேரி, அக். 6—

"மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த காங்கிரஸ் தொகுத்த திட்டங்களை நிறைவேற்றவே, காங்கிரஸ், மாவட்டக் கழகத் தேர்தலில் கலந்து கொள்கிறது; புதிய மாவட்டக் கழகங்கள் பழையபடி போல் சம்பிரதாயமான வேலைகளில் மட்டும் ஈடுபடாமல் மக்களின் நல்வாழ்வுக்கான அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற தீவிரமாகப் பாடுபடும்."

"சட்டசபை இயற்றிய சட்டத்தின் கீழ் மாவட்டக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன; ராஜ்ய சர்க்காரின் கட்டுப்பாட்டில்தான் அவை வேலை செய்ய வேண்டும்; சர்க்கார் அமைக்கும் கொள்கையின் முரண்பட்ட கொள்கையை மாவட்டக் கழகங்கள் கடைபிடிக்க முடியாது; எனவே, எந்தக் கட்சி மாவட்டக் கழகத் தேர்தலில் வெற்றிபெறுகிறதென்பது அவ்வளவு முக்கியமல்ல,"

என்று, விவசாய மந்திரி பக்தவத்சலம், மலபார் மாவட்டத்தைச் சேர்ந்த தலைச்சேரி வட்டத்தில் காங்கிரஸ் உறுப்பினர்களை மக்கள் ஆதரிக்க வேண்டும் எனக் கோரி தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கி வைத்தார்.

## குழந்தையின் பிறந்த நாள் விழாவில் தந்தை கொலை

## மலேயா கம்யூனிஸ்டுகளின் கோரச் செயல்!

கோலாலம்பூர்—

ஜோகூர் பகுதியில் உள்ள கூலி என்னும் எஸ்டேட்டில் குமாஸ்தாவாக வேலை பார்க்கும் கே. சி. சேகர் என்பவரை ஆயுதம் தரித்த சீன கம்யூனிஸ்ட் பயங்கரவாதிகள் கொலை செய்தனர் என்று தெரிகிறது.

இக் கோரக் கொலையை, சேகரும், அவரது மனைவியும் தங்கள் அருமைக் குழந்தையான சாந்தாவின் ஆறாவது பிறந்த தின விழாவைக் கொண்டாடி மகிழ்ந்த போது செய்தனர் என்று தெரிகிறது.

காலை 8 மணிக்கே இத்தம்பதிகள் புத்தாடை உடுத்தி, குழந்தையின் ஆண்டு நிறைவிற்கு வந்திருந்த சுற்றத்தார்களையும், நண்பர்களையும் உபசரித்து மகிழ்ந்திருந்தனர். அனைவரும் மகிழ்ச்சியில் மூழ்கியிருந்த நேரத்தில், இந்த மாபாதகர்கள் வீட்டைச் சூழ்ந்துகொண்டனராம்; சிலர் உடனே நுழைந்துவிட்டனர்; உள்ளே நுழைந்த கம்யூனிஸ்ட் பயங்கரவாதிகள் சேகரை அழைத்து அவரிடம் உள்ள [illegible] கொடுக்கும்படி கூறினார்களாம். அங்கே நின்ற மக்கள், பயங்கரவாதிகளைக் கண்டவுடன் பயத்தினால் நடுங்கிப் போனார்கள்.

சேகரின் மனைவி, சீனப் பயங்கரவாதிகளான கம்யூனிஸ்ட் கொலைக்காரர்களின் காலடியில் வீழ்ந்து, தனது கணவனிடம் [illegible] ஏதும் இல்லை என்றும், தேவையென்றால் தனது நகைகளை எல்லாம் கொடுத்துவிடுவதாகவும், தனது கணவரைத் துன்புறுத்த வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

நகைகள் அனைத்தையும் பெற்றுக்கொண்ட கொலை கோரக் கும்பலைக் கொண்ட கொடியவர்கள் சேகரை அவரது படுக்கை அறைக்குள் போகுமாறு கூறி, அவர்களும் பின் தொடர்ந்து சென்றார்களாம்; படுக்கை அறைக்குள் சென்ற பின்னர், பயங்கரவாதிகள், உள்பக்கம் தாளிட்டுக் கொண்டு, மூன்று முறை சுட்டு சேகரைக் கொலை செய்தனர்.

கொலை நிகழ்ச்சி முடிவடைந்ததும், நகைகளுடன், மாபாதகர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

கடந்த மூன்று மாதங்களில் மலேயா கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பயங்கரவாதிகள் இதுபோல் கோரமாக இந்தியர்களை கொலை செய்தது, இது மூன்றாவது தடவையாகும்!

## சீனா — இலங்கை வர்த்தக ஒப்பந்தம்!

### நடைமுறைக்கு வருகிறது!

இலங்கையும், சீனாவும், ரப்பர்; அரிசி ஆகியவற்றை ஒருவருக்கொருவர் தந்து உதவிக் கொள்ளுதல் என்ற ஒப்பந்தம் நிறைவேற்றியுள்ளன. அதன்படி, சீனாவிற்கு சென்றிருந்த இலங்கையின் வியாபார தூதுக் குழு, விலை நிர்ணயத்திற்காக சீனாவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளில் வெற்றி கண்டிருப்பதாக, மக்கள் சபையில் பிரதமர் கொத்தலாவலை அறிவித்தார்.

விலை நிர்ணயத்திற்கான ஒப்பந்தம், மறுநாள், பீகிங்கில் கையெழுத்தாகுமென்று தெரிகிறது.

ஐந்தாண்டுகளுக்கான இந்த வியாபார ஒப்பந்தப்படி, சீனா இலங்கைக்கு ஆண்டுதோறும் 2,75,000 டன் அரிசி தந்துவிட்டு, இலங்கையிலிருந்து 50,000 டன் ரப்பர் பெற்றுக் கொள்ளும் எனத் தெரிகிறது.

விலைகள் மட்டும், ஆண்டுதோறும் மார்க்கெட் நிலவரத்திற்குத் தக்கவாறு இருதரப்பாரும் மாற்றியமைத்துக் கொள்ளப்படும் எனத் தெரிகிறது.

## சுருள் சுருளான முடி கண்டு ரஷியர்கள் பரவசம்!

—o—

### கே. டி. ராஜு ரஷ்யா செல்வதற்கு வாய்ப்பு கிடைத்ததின் இரகசியம்?

ரஷ்ய சுற்றுப்பயணம் முடிந்த தோழர் அனந்தன் நம்பியார் பொன்மலையில் பேசுகையில், "மாஸ்கோவில் உள்ள செஞ்சதுக்கத்தில் ஸ்டாலின், லெனின் ஆகியோரது உருவங்கள், அங்குள்ளது போலவே தத்ரூபமாக இருந்தன; இதைப் பார்க்க ஆயிரக்கணக்கான மக்கள் கூடியவண்ணமிருக்கின்றனர்; நாங்களும் ஆயிரக்கணக்கான மக்களிடையே இருந்தோம்; அப்போது எனது அருகிலிருந்த தோழர் கே. டி. ராஜுவின் சுருள் சுருளான முடியழகைக் கண்டு, ஏராளமான ரஷ்யர்கள் களித்தனர்." என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர், தனக்கு ரஷ்யர்கள், பல சாமான்கள் பரிசாகத் தந்ததாயும் கூறினார். அதற்குள் ஒருமுறை கூடாரத்தை, கூடியிருந்த மக்களுக்கு அவர் வேடிக்கைகளை காட்டினார் என்றும் செய்தி வெளியாகியுள்ளது.

# தோழர் சம்பத் பேச்சு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

என்றுதான் அவனை சரித்திர ஆசிரியர்கள் வர்ணிக்கிறார்கள். 'நெப்போலியன், ஐரோப்பாவை ஒன்றுபடுத்துவது என்று கூறிய 'லட்சியம்' பொய்யானது; வெறும் மேல் பூச்சு; அவன் ஐரோப்பா முழுவதையும் ஒரே குடையின் கீழ் கட்டியாள வேண்டும் எனும் ஆதிக்க வெறிகொண்டலைந்தவன்,' என்றுதானே தீர்ப்பு கூறுகின்றனர், வரலாற்று வல்லுனர்கள்!

"நெப்போலியன், 'ஐரோப்பிய ஒற்றுமை' என்ற பெயரில், பல நாடுகளுக்கு விடுதலை வழங்கப் போவதாகக் கூறினான். அப்போது அவன் அந்த விடுதலை என்ற சொல்லுக்குக் கொண்ட பொருள் என்ன? அவன் தோற்கடிக்கப்பட்ட பிறகு, அவன், 'விடுதலை விரோதி' என்று வர்ணிக்கப் படுகிறானே, அப்போது இந்த விடுதலை என்ற சொல்லுக்கு, சரித்திராசிரியர்கள் கொண்ட பொருள் என்ன?

நெப்போலியனைப் போலவே தான் இட்லரும் கூறினான்— 'ஐரோப்பாவை ஒன்றுபடுத்தி ஐரோப்பிய மக்களுக்கு விடுதலை வாங்கித் தரப்போகிறேன்'— என்று!

போலந்து, ஆஸ்திரியா ஆகிய நாடுகளை இட்லர் பிடித்துக்கொண்ட போது, 'அவைகளுக்கு விடுதலை வாங்கிவிட்டேன்,' என்றான் இட்லர்; ஆனால், இட்லரின் எதிரிகளாயிருந்த சர்ச்சிலும், ஸ்டாலினும், ட்ருமனும் 'ஆஸ்திரியாவை இட்லர் விழுங்கிவிட்டான்; அடிமை கொண்டு விட்டான்; எனவே, ஆஸ்திரியாவிலிருந்து இட்லரை விரட்டுகிறோம்,' என்றுகூறி, இட்லரின் ஆதிக்கத்தைத் தொலைத்துவிட்ட பிறகு, 'ஆஸ்திரியா இழந்துவிட்டிருந்த விடுதலையை மீண்டும் பெற்றுவிட்டது,' என்று கூறினார்கள்.

அப்படியானால், 'விடுதலை' என்ற சொல்லுக்கு, இட்லர் கொண்ட பொருள் என்ன? சர்ச்சிலும், ஸ்டாலினும் கொண்ட பொருள் என்ன?

இட்லரை, 'விடுதலை விரோதி' என்றுதானே இன்றைய பத்திரிகை உலகமும், அரசியல் உலகமும் கூறுகின்றன. 'ஐரோப்பிய ஒற்றுமை' என்ற பெயரில், இட்லர் போர்வெறி கொண்டவனாய், ஆதிக்க ஆசை கொண்டவனாய், ஏகாதிபத்தியப் பேயனாய் விளங்கினான் என்றுதானே உலக அரசியல்வாதிகள் சொல்லுகிறார்கள்? அப்படியானால் இங்கே 'விடுதலை'க்குப் பொருள் என்ன?

இட்லர், ஸ்டாலினையும் சர்ச்சிலையும் 'விடுதலை விரோதிகள்' என்று வர்ணித்தான்; ஸ்டாலினும், சர்ச்சிலும், இட்லரை, 'விடுதலை விரோதி' என்று வர்ணித்தனர்; ஏன் இந்தப் பொருள் வேறுபாடு?

இன்றுகூட உலக அரசியல் இரண்டு கூறுகளாய் பிரிந்து தானே செயல்படுகிறது; அல்லவா?

'கம்யூனிஸ்டு கூறு' என்கிற முறையில் ரஷியாவும், சீனாவும் இன்னும் அவற்றைச் சார்ந்த நாடுகள் சிலவும் இருக்கின்றன. 'ஜனநாயகக் கூறு' என்ற வகையில், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளும் இருக்கின்றன.

இரண்டு கூறுகளைச் சேர்ந்தவர்களும் ஒருவரை ஒருவர், 'விடுதலை விரோதிகள்' என்று வர்ணித்துக் கொள்கிறார்கள்.

இவ்வாறாக, நமது நடைமுறை வாழ்வில் அன்றாடம் பலரிடமும் புழங்கிக் கொண்டிருக்கிற சாதாரண வார்த்தைதான், 'விடுதலை' என்ற சொல்; ஆனாலும், அந்த சொல், நாட்டின் நடைமுறைக்கு வருவதற்காக நடந்திருக்கிற புரட்சிகள், யுத்தங்கள் பிரமிக்கத் தக்கவையாக மட்டுமல்ல—எண்ணற்றவையுங்கூட!

உலகில் மனிதர்கள் அடிமைகளாய், அரை மனிதர்களாய் வாழ்கின்ற நிலையை மாற்றி, அவர்கள் சுதந்திர புருடர்களாய், விடுதலை பெற்ற வாழ்வு பெறவேண்டுமென்பதற்காக, உலகத்தில் நடைபெற்றுள்ள பயங்கர நிகழ்ச்சிகள் ஏராளம்; ஏராளம்!!

இந்த விடுதலை என்ற சொல்லையும், அதுகொண்ட பலியினையும், அந்தச் சொல்லுக்காகச் செய்யப் பட்டுள்ள வீரச் செயல்களையும், தியாகங்களையும், அந்தச் சொல் யார் யாரால் எப்படி எப்படிப் பொருள் கொள்ளப்பட்டது என்பதையும் ஆராய்ச்சி நடத்தவோ, விவாதிப்பதற்கோ அல்ல, நாம் இங்கே கூடியிருப்பது; ஆனாலும் அந்தச் சம்பவங்களை மட்டும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஐரோப்பாவில், கி. பி. 800, 900 ஆகிய நூற்றாண்டுகளில் விடுதலை என்ற சொல்லுக்குக் கொள்ளப்பட்ட பொருள் என்ன?

இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய நாடுகளில், ஒரு நாட்டு விடுதலை என்பது, அந்த நாடு, குறிப்பிட்ட ஒரு சொந்த அரச பரம்பரையினால் ஆளப்பட்டு வந்தால், விடுதலையுடன் அந்த நாடு வாழ்வதாகப் பொருள் கொள்ளப்பட்டது.

அந்த நாட்களில் எல்லாம், இந்த நாட்டிலுங்கூட இருந்ததாகச் சொல்லப்படுகிற 'அரச வம்சங்கள்' பல இருந்தன; ஒரு நாட்டை ஆள்வதற்கென்ற அரச பரம்பரைகள் இருக்கும். அப்படி தொடர்ந்து ஒரு நாட்டில் அரசோச்சும் ஒரு அரச வம்சத்தை, பக்கத்து நாட்டு அரச பரம்பரையினர் போரிட்டு வென்று அடிமை கொண்டால், அப்போது அந்த நாட்டின் விடுதலை பறி போயிற்று என்று கூறினார்கள்.

தனது சொந்த நாட்டு அரச பரம்பரை—இராஜ வம்சம்—மீண்டும் ஆட்சி பீடம் ஏறினால், அன்று விடுதலை திரும்பவும் கிடைத்து விட்டதென்று சொன்னார்கள்.

இந்த நிலை சுமார் கி. பி. 1,200-வரையிலும் ஐரோப்பாவில் நிலவியது எனலாம்.

இந்தக் காலத்திற்குப் பிறகு, ஒரு நாடு, சொந்த அரச பரம்பரையாலேயே ஆளப்பட்டாலும், ஆளுகிற அரசனையும், ஆளப்படுகிற மக்களையும் பிரித்து வைக்கிற கோடு எங்கே இருக்கிறது? அரசனுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பு என்ன என்ற சிந்தனை எழ ஆரம்பிக்கிறது.

அந்தச் சிந்தனையின் விளைவாக, அரசன் மக்களுக்குச் சில உரிமைகளை வழங்க வேண்டும் என்கிற நிலை உருவாயிற்று.

இதற்கு உதாரணமாக, இங்கிலாந்து நாட்டை ஆண்ட ஜான் மன்னனிடம், மக்கள், தங்களுக்கென எழுதி வாங்கிக்கொண்ட உரிமைச் சாசனம் 'மாக்னா கார்டா' என்ற சாசனமாகும்.

இந்தக் காலத்தில் எல்லாம், காட்டிலே வாழ்கிற மிருகங்களை விலங்கினங்களை, மன்னன் மட்டுமே வேட்டையாடலாம்; மக்கள், தங்கள் வீட்டுத்தோட்டத்திலுள் காட்டு மிருகங்கள் புகுந்துவிட்டாலுங்கூட, வேட்டையாடக் கூடாது; அப்படி வேட்டையாடி மிருகங்கள் குறைந்துவிட்டால் அரசன் வேட்டையாட வனத்தில் விலங்குகள் இல்லாமற்போகலாம்; அதனால், வேட்டையாடுவதில் மன்னன் பெறும் மகிழ்வு கிடைக்காமற் போய்விடும் என்றிருந்தது. 'மாக்னா கார்டா' போன்றவையினால், விடுதலை என்ற பெயரினால், மக்களுக்கும் வேட்டையாடுவது போன்ற உரிமைகள் வழங்கப் பெற்றன.

அக்காலங்களில், அந்த நாட்டு மக்கள், தங்களை ஆளும் மன்னனிடமிருந்து எத்தனை அதிகமான உரிமைகளைப் பெற்று வாழ முடியுமோ அத்தனை உரிமைகளையும் பெற்று வாழ்வதையே விடுதலை வாழ்வெனக் கொண்டனர் என்கிற நிலை வளர்ந்தது.

பின்னர், 18, 19-ம் நூற்றாண்டுக் காலத்தில், 'அரச தத்துவம் ஒழியவேண்டும்; ராஜரீகம் அழிய வேண்டும்; மன்னர் பரம்பரையே பூண்டற்றுப் போகவேண்டும்,' எனும் நிலை உருவாக ஆரம்பித்தது; அதுவும், 'விடுதலை' என்ற பதத்தைப் பின்னணியாகக் கொண்டது தான்!

இதற்கு எடுத்துக்காட்டாக, 18-ம் நூற்றாண்டின் இறுதியில், பிரான்ஸ் நாட்டில் பொங்கியெழுந்த புரட்சியைக் கொள்ளலாம்!

பிரான்ஸ் நாட்டை ஆண்ட லூயி மன்னன் ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காக—பிரான்சு, மன்னர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்பதற்காக—மக்கள் நடத்திய புரட்சி தானே அது!

எது நடந்தால் மக்கள் விடுதலை பெறுவார்கள் என்று புரட்சிக்காரர்கள் எண்ணினார்கள் என்றால்—'மன்னன் கொல்லப்பட வேண்டும்; மன்னனின் ஆதிக்கம் ஒழிய வேண்டும்,' என்பதுதான்!

இந்தக் காலத்தில், 'விடுதலை' என்ற சொல், புதியதொரு பொருளைக் கொள்வதை நாம் காண்கிறோம். பிரெஞ்சுப் புரட்சியின் போது, ரூசோ, வால்டேர், நிகால்பாக் போன்றவர்கள், விடுதலை என்ற சொல்லுக்குப் புதுப்புது விளக்கங்கள் தர முற்பட்டார்கள்.

12-ம் நூற்றாண்டில் 'விடுதலை'க்குக் கொள்ளப்பட்ட பொருள், 18-ம் நூற்றாண்டில் மாறுபடுகிறது; விரிவடைகிறது, வளர்கிறது!

'ரூசோ எழுதிய, 'சமுதாய ஒப்பந்தம்,' ஒரு விடுதலை விளக்கம்; எவை எவை மக்களுக்குக் கிடைத்தால்தான் மக்களின் வாழ்க்கை பரிபூரணத்துவம் அடையும் என்பதை, ரூசோ தனது 'சமுதாய ஒப்பந்தத்தில்' விளக்கினான்.

வால்டேர், தனது நாடகங்கள், கட்டுரைகள், நாவல்கள் மூலமாக விடுதலைக்குப் புதிய வியாக்கியானங்களைத் தந்து சென்றான். அவன் எழுதிய நாடகம் ஒன்று, பிரான்சு நாட்டு நகரமொன்றிலே நடைபெறுகிறது. அந்த நாடகத்தில் வரும் பாத்திரம், 'நான் புருடனின் மகன்; மன்னன் ஆதிக்கத்தை வெறுக்கிறேன்,' என்று பேசும்படியாக வசனங்களை அமைக்கிறான், வால்டேர்; மக்கள் ஆரவாரம் செய்து, கையொலி எழுப்பி, வால்டேரின் கருத்துக்களை வரவேற்கின்றனர்!

இப்படி, 'அரச பரம்பரையே' அழிக்கப்பட வேண்டும். என்ற நிலை, 'விடுதலை'யை அடிப்படையாகக் கொண்டே வளர்ந்து, நாளா வட்டத்தில், உலகிலேயே, மன்னர்கள் என்றாலே ஒரு வெறுப்புணர்வு கொள்கிற நிலைக்கு, 'விடுதலை'யின் பொருள் விரிவடைந்தது.

இவை, கடந்த காலத்திலே நிகழ்ந்த சம்பவங்கள்! இன்றைய வரலாறு சொல்லும் உண்மைகள்!

இப்படி, ஆதிக்கங்கள் ஒழிக்கப்பட்டு, மக்கள் விடுதலையுடன் வாழ்கிற வாழ்வுதான், நல்வாழ்வு எனக் கொள்ளப்படுகிறது.

நாம்—தென்னாட்டவராகிய—திராவிடர்களாகிய நாம்—'இந்த நல்வாழ்வு நமக்கும் தேவை', என ஆசைப்படுவதால்தான், விடுதலை பற்றிப் பேசுகிறோம்.

[தோழர் சம்பத் பேச்சு முடியவில்லை; தொடர்ந்து, நாளை வெளிவரும்.]

---

தி. மு. கழகப் பொதுச்செயலாளர்

## அண்ணாதுரை

நிகழ்ச்சிகள்

★

**16—10—54** வண்ணையம்பதி: மாலை 6 மணிக்கு தியாகராயர் கல்லூரியில் நாடகத்திற்குத் தலைமை.

**17—10—54** இராயபுரம்: மாலை 6 மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டம்.

**18—10—54** செம்பியம்: மாலை 6 மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

---

பொதுச் செயலாளர்

## அண்ணாதுரை

கலந்து கொள்ளும்

## இராயபுரம், செம்பியம் கூட்டங்கள்

18—9—54, 19—9—54 சனி, ஞாயிறுகளில் முறையே செம்பியம்—இராயபுரம் ஆகிய இரு பகுதிகளில் தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் கலந்து கொள்ளுவதாக இருந்த தி. மு. க. பொதுக் கூட்டங்கள், நெல்லை மாவட்ட மாநாட்டின் காரணமாகத் தள்ளிவைக்கப்பட்டன.

"அவ்விரு கூட்டங்களும், 17—10—54 ஞாயிற்றுக் கிழமை சென்னை இராயபுரத்திலும், 18—10—54 திங்கட் கிழமை செம்பியத்திலும் நடைபெறுவதற்கு அண்ணா ஒப்பியுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்ளுகிறோம்," என்று, 2-வது வட்டம் தி. மு. க. செயலாளர் மு. வரதன்; 20-வது வட்டம் தி. மு. க. செயலாளர் பெ. பா. ஏகாம்பரம் அறிவிக்கின்றனர்.

---

# மாநில மொழிகள் மன்றமேறுவதில் வயிற்றெரிச்சல்!

## இந்தி இடம் பெறுது! போகுமே என ஏக்கம்!

### உள்நாட்டு மந்திரி கட்ஜூ கலக்கம்

"அனுபவம் மிக்க வழக்கறிஞர்களும், ஓய்வு பெற்றுள்ள உயர்நீதிமன்ற நீதிபதிகளும் இந்தி மொழியில் நல்ல பயிற்சி பெற வேண்டும்; ஏனெனில், இன்னும் 10 ஆண்டுகளில் இந்திதான் தலைமை உயர் நீதிமன்ற (சுப்ரீம் கோர்ட்) மொழியாக இருக்கும்,"

என்று, யூனியன் சர்க்கார் உள்நாட்டு மந்திரி டாக்டர் கட்ஜூ, ஆமதாபாத் குஜராத் சட்டக் கல்லூரி வெள்ளி விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"அண்மையில், அகில இந்திய தலைமை உயர்நீதி மன்ற வழக்கறிஞர்கள் சங்கம் ஒன்று ஏற்படக் கூடும்; இந்தியாவின் பல இடங்களைச் சேர்ந்த அனுபவம் மிகுந்த வழக்கறிஞர்களைக் கொண்டதாக அது இருக்கும்; ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளும் அச்சங்கத்தில் இடம் பெறலாம்."

"**15 ஆண்டுகளில் ஆங்கிலம் ஒழிய வேண்டும் என்று அரசியல் சட்டம் கூறுகிறது; ஆனால், ஆங்கிலம் ஒழிந்த உடனேயே அதன் இடத்தை, இந்தி அடைய வேண்டும் என்று அரசியல் சட்டத்தில் வசதி செய்யப்படாதது துரதிருஷ்டமேயாகும்.**"

"மாநிலங்களில் ஆங்கிலம் பெற்றிருந்த இடத்தை வட்டார மொழிகள் அடையும் போது, அந்த இடங்களில் இந்தியை நுழைப்பது அவ்வளவு சுலபமல்ல," என்றும் அவர் குறிப்பிட்டார்.

---

## கழகக் கூட்டம்

★

தேரிழந்தூர் (மாயூரம் வட்டம்) கடை வீதியில்

தலைவர்: என். கிட்டப்பா

பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
எஸ். எஸ். ராசேந்திரன்

---

### திருக்குறள் வகுப்பு

12—10—54 பிற்பகல் 2½ மணிக்குமேல், சென்னை, கொண்டிதோப்பு, எண். 15, முத்துகிருஷ்ணன் தெருவில் திருக்குறள் வகுப்பு நடைபெறும். 'விருந்தோம்பல்' என்பது குறித்து தோழர் மயிலை சிவமுத்து, தோழியர் வ. பா. தாமரைக்கண்ணி ஆகியோர் பேசுவர்.

---

### சொற் பயிற்சிக் கூட்டம்

13—10—54 மாலை 6 மணிக்கு சென்னை 5-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் எம். எஸ். செயச்சந்திரன் தலைமையில் 'இலக்கியமும் இனிமையும்' என்னும் பொருள் பற்றி நடைபெறும் சொற் பயிற்சிக் கூட்டத்தில் தோழர்கள் இளந்தென்றல், இராமதாசன், நலங்கிள்ளி, சு. ரத்தினம், கி. இராசேந்திரன் ஆகியோர் பேசுவர்.

---

## மீர்சாகிப்பேட்டையில் கழகக் கூட்டம்

சென்னை 43-வது வட்டம் மீர்சாகிப்பேட்டை தி. மு. கழகச் சார்பில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் ப. கன்னியப்பன் தலைமை தாங்கினார்.

தோழர் இளம்பரிதி பேசியதும் இசைமுரசு நாகூர் அனீபா இசை முழக்கம் செய்தார்.

அடுத்து தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் பேசியதும், எஸ். எஸ். ராசேந்திரன் பேசினார்.

பின்னர், தோழர் எ. கோவிந்தசாமி, எம்.எல்.எ. அவர்கள் சொற்பொழிவாற்றினார். அவருக்கு 43-வது வட்ட தி. மு. கழகச் சார்பிலும், இன்னும் பல கழகங்கள் சார்பிலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பெற்றன.

இறுதியாக தோழர் மு. கருணாநிதி அவர்கள் பேசினார்.

---

### தோழர் நெடுஞ்செழியன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளுவார்.

23—10—54 மாலை இலங்கை-கொழும்பு கழகத் தோழர்கள் அடங்கிய கூட்டத்தில் கலந்து கொள்வார்.

24—10—54-ம் நாள் கொழும்பு கழகத்தின் சார்பாக நடைபெறும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசுவார்.

25-10-54 அல்லது 26-10-54ல் சென்னை திரும்புவார்.

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.